வண்ணத்திரட்டு

பலவித்துவான்கள் பாடியது.

திருத்திய புதிய பதிப்பு

லக்ஷ்மி விலாச புஸ்தகசாலை

திருவல்லிக்கேணி சென்னை

காப்பிரைட்] [விலை அணா 6

The Mohan Press,
17-A., Meeran Sahib Street,
Mount Road, Madras.

விஷய அட்டவணை

பக்கம்.

1	சிற்றம்பலவாணர் வண்ணம்	1
2	தியாகராசர் வண்ணம்	10
3	புஷ்பவனநாதர் வண்ணம்	18
4	செண்டலங்காரப்பெருமாள் வண்ணம்	28
5	இராமநாயகர் வண்ணம்	33
6	அண்ணாமலையார் வண்ணம்	39
7	மூவரையன் வண்ணம்	43
8	பெண்கலை வண்ணம்	50
9	திருப்போரூர் ஆண்டவர் வண்ணம்	57
10	பட்டினத்துப் பிள்ளையார் வண்ணம்	65
11	தாயுமான சுவாமிகள் வண்ணம்	71
12	அந்தக்கவிவீரராகவமுதலியார் வண்ணம்	75
13	தண்டபாணி சுவாமிகள் வண்ணம்	79

உ

கணபதி துணை

சிதம்பரத்துச்

சிற்றம்பலவாணர் வண்ணம்.

இராகம்-புன்னாகவராளி-தாளம் ஆதி.

தய்யத் தனன தத்த தனத்தந் தானன

தய்யத் தனன தத்த தனத்தந் தானன

தத்தந்தன தத்தந்தன

தத்தந்தன தத்தந்தன

தத்தந்தன தத்தந்தன

தத்தந் தனதான—தனதான தந்ததத்தந் தானனு.

வள்ளிக் குள்விழி வைத்த குறப்பெண் போல்வரு

தெய்வத் துரைய ளித்த துரைப்பெண் காதலர்

செப்பும்பிரண வத்தின்பொரு

ளைக்கண்டுசி ரக்கம்பமொ

டார்த்தஞ்சொல்மு கச்சந்திரனை

முத்தங்கொளும் வாயர்

வெள்ளித் தளிர்நிறந்த எருக்கம் பூமலர்
வில்வக் கிளையில் வைத்து முடிக்குந் தூயவர்
அக்கொன்றையும் இக்கொன்றையும்
அக்கங்கையும் இக்கங்கையும்
அத்திங்களும் இத்திங்களும்
வைக்குஞ்சடை யாளர்

வள்ளத் தினில்வ டித்த கருப்பஞ் சாறதை
பள்ளிக் கொடுகு டித்த தினிப்பென் றேதின
மெச்சுங்கிளி மெச்சுங்குயில்
மெச்சுங்கனி சொற்கண்டவர்
கற்கண்டிது கற்கண்டிது
கற்கண்டென வோது
சிவகாம சுந்தரிப் பெண் பாகனர்,

வல்லொத் தபூலை தைக்க மிதிக்கும் பாறையில்
வல்லிக் கொடிமு ளைக்க மிதிக்கின் றோர்சத
பத்ரந்தரு புட்பம்பல
புட்பம்புனை தற்கங்கொரு
புட்பங்குறை யக்கண்டும
லர்க்கண்புனை பாதர்

பிள்ளைக் கறித னக்கு விருப்பம் போல்வரு
கள்ளப் பசித ணிக்க நினைத்தன் போடுசெய்
கைப்பொன் றுபு ளிப்பொன் றுது
வர்ப்பொன் றுரு சிப்பொன் றித
மெய்த்தொண்டர்சி றுத்தொண்டர்ச
மைக்கும்பரி பாகர்

வையத் தைவிலை பெற்ற பதக்கந் தான்விரி
பைவத் தவர வத்தி லமைக்கின் றோர்மணி
வச்ரங்கள்ப திக்கின் றக
டுக்கன்கள்வி ரற்கொண்டப
வித்ரங்களை னக்கொண்டுத
ரிக்கும்பட நாகர்
விடநாக நஞ்சணைத் திடும் பூஷணர்;

தெள்ளத் தெளிய வைத்த தமிழ்ச்செந் தேன்கலை
தையற் பறவை பெற்ற இதழ்ச்செந் தேனனை
அச்சுந்தர ருக்கென் றதை
விற்குந்தொழில் கற்கின் றவர்
அப்பன்கவி புத்ரன்கவி
யைக்கொண்டவி னோதர்

கல்வித் தமிழு ரைக்க நடக்குஞ் சீறடி
பல்லக் கில்வரு தற்கு நினைக்கின் றோர்கன
கக்கிம்புரி யிற்கொம்புநிர்
முத்தஞ்சொரி ரத்தம்பவ
ளத்தின்ப்ரபை யைத்தந்திட
மைக்குன் றுரி வீரர்

தெவ்வர்க் குயர்பொ ருப்பை வளைக்கின் றோர்சிறு
கொவ்வைக் குள்நில வைப்பின் விளைக்கின் றோரர
வெட்டுங்கரி யெட்டுங்கிரி
யெட்டுங்கட லெட்டும்புவி
யெட்டுந்திசை யெட்டும்பரி
வட்டம்புனை நேயர்
தலைமாலை யுந்தரிக்குந் தோளினர்,

செய்யிற் கயல்கு திக்க மணக்குஞ் சோலைகள்
செய்யிற் சொரிய விட்ட மதுக்கொண் டேவய
லுக்கும்பயி ருக்குங்கமு
குக்குங்கத லுக்குங்கட
லுக்கும்புய லுக்குங்குளிர்
விக்குந்தொழி லான

பள்ளப் பயலொ ருத்த னெதிர்த்தங் கேவரு
பள்ளச் சிறுபெணிட்ட கடைக்கண் பார்வையின்
மைக்கொண்டது டிக்கின்றதை
மச்சங்களை னச்சென்றுபி
டிக்கும்பொழு திற்கண்டுவி
ளைக்குங்குறு மூரல்
செய்யிற் குமுத மொய்த்த மலர்ச்செந் தேனிறை
தில்லைப் பதித மைச்ச நடிக்கின் றேர்கம
லத்தன்குவி சத்தன்துள
பத்தன்சய நத்தன்பணி
கர்த்தன்புலி நித்தம்பணு
சிற்றம்பல வாணர்
வரைமாத ருந்துதிக்குந் தோகையார்,

வெள்ளைத் துகிலு டுத்த சயிக்கந் தான்மத
னுள்ளுக் கொளுவி ருப்பை யுணர்த்துங் காணத
னைக்கண்டு களிக்குங்கள
வைக்கண்டெதிர் நிற்கின்றவர்
வெட்கந்தனை யுட்கொண்டொரு
பக்கந்தனில் நாணி

மெள்ளத் தழுவ லெனக்கு ளடுக்கின் றூர்முலை
புல்லிக் கொள மடிக்கு லிருக்கின் றுரொரு
முத்தந்தா முத்தந்தா
முத்தங்கொள முத்தங்கொள
இத்தந்தம மூத்தும்புல
விப்பெண்பிழை தீர

வெள்ளிக் கதிர்கி முக்கி லுதிக்குங் காணது
சொல்லப் பொழுதி லெக்க ணுறக்கம் போலவென்
மெய்க்கங்கணை தைக்கின்றதி
லக்கந்தபொ டிச்சிந்திட
வெச்சென்றெலு மிச்சம்பழ
மொற்றும்பொழு தாறும்
இருபேரு டம்பிணைப்புந் திருமே,

வெள்வெற் றிலைக டித்த சுருள்தந் தாள்நல
வெல்லத் திலுமெ னக்கு ருசிக்குங் காணதெ
னக்கென் றுமு னக்கென் றுமி
லைப்பங்குபி றித்துண்பதில்
தப்புண்டுபி ளப்புண்டுகி
டக்கின்றத னேக

முல்லைக் கணைவெ ளுத்த முருக்கம் பூவென
துள்ளத் தையொரு மிக்க உருக்குங் காண்மலர்
மைக்கொண்டை முடித்துஞ்சர
சச்சிந்துப படித்தும்புழு
கைக்கொண்டு தரித்துந்தழு
விக்கொண்டித மாக

மெள்ளத் துகிலை விட்டு நெகிழக்கின் றேனவர்
பையத் திருவி ளக்கை யவிக்கின் றார்நவ
ரத்னங்கள்ப திக்குந்தொடை
சுற்றெங்குநி றைக்கின்றதி
லெட்டொன்பது பத்தஞ்சுவி
ளக்கின்சுட ராக
இளமூரல் தந்தெனைப்பின் கூடுவார்,

கள்ளித் தனைகுடித்த மயக்கந் தானென
மெய்யிற் பரவ சத்தொ டணைக்கும் போ[illegible]
விற்சென் றுகிர் தைக்குந்துணை
மைக்கண்படை வெட்டுங்கரி
யிற்கொம்புகள் குத்துங்கல
விச்சண்டையி னூடு

கிள்ளுப் படுதெ னக்கை நெரிக்கின் றுள்வலு
கள்ளிர் குமிது மெத்த விருப்பங் காணய
னத்தும்பிய றக்குங்கள
பத்தும்பியெ திர்க்குங்குழ
லிற்றும்பிம றைக்குங்கமு
குத்தும்பியி னோசை
கல்லுக் குருகு விக்கு மிதைக்கண் டாலொரு
பையற் குயிர்த ரிக்க வழக்குண் டோமத
னஸ்த்ரங்கள்து ளைக்கின்றதில்
ரத்தங்கள்து ளிக்கின்றதெ
னக்கண்டுப்ர மிக்குந்தில
தச்சிந்துர வேர்வை
முலையானை யுங்குளிக்குங் காணுமே,

கையத் தனைப டத்தை விரித்தங் கேயிடை
மையத் திலொரு சர்ப்பம் நடிக்குங் காணளி
னக்கண்கள்க றுக்குங்குவ
ளைக்கண்கள்சி வக்குங்குமு
தக்கண்கள்வெ ளுக்கும்புள
கக்கொங்கைக ளாடும்

எள்ளத் தனையி யிருக்கு மிடைக்குஞ் சேதமோ
ரெள்ளத் தனையி ரக்க முலைக்குண் டோவென
அக்கண்கள்மு லைக்கண்பட
இக்கண்கள்மு முக்கண்பட
மைக்கண்கள ரைக்கண்பட
மெய்க்குந்தெரி யாது
கைவிட் டரசி லைக்கு ளிருக்கும் பாலலை
துள்ளித் திவலை சுற்றி யிறைக்கும் போதலர்
விற்கொண்டச மர்த்தன்கையி
லாக்கின்றத னைக்கண்டுர
திப்பெண்பனி நீர்ச்சொம்புதெ
ளிக்கும்புன லாகும்
அனுபோக மும்பருக்குந் தேடுமே.

தியாகராசர் வண்ணம்.

இராகம்-யமுனாகல்யாணி-தாளம் ஆதி.

தானனதந்தந் தனந்தத்தந்
தனத்தத்தா தனத்தானன
தானனதந்தந் தனத்தத்த தான தனதத்த
தனதானதான தனதானதான
தனதானதான தனதானதான
தனதனதானன தனனதானனா.

சீருல வுந்திங் களுங்கட்டுங்
கடுக்கைப்பூ வுமிக்கானப
கீதி யுஞ்செஞ் சடைக்கற்றை மீதிலணிகர்த்தர்
சிறுபாலன்மீது பொருகாலனார்மெய்
சிதைவாகமோதி புதைவீசுபாதர்
வானவர் நெஞ்சங் கலங்கிச்சஞ்
சலித்தூக்கூ வுமப்போதையி
லாலமுங் கந்துண் டுயிர்ப்பிச்சை யீயுமொருசித்தர்
வடவாலநீழ லடியார்கடேற
மறைகூறியாளு முபதேசநாதர்

தேடிவ ருந்துங் குழந்தைக்கன்
புவைத்துக்காய் பசிக்காகிய பாலலைபொங்கும்
கடற்பட்ச மாகியருளத்தர்
தெளிவானசோதி யொளிதானரூத
திருநீறுமேவு திருமேனியாளர்
வடிவுடைநாயகி மருவுபாகனூர்,
சேகர சந்த்ரன் குலுங்கக்கிண்
கிணிக்கொத்தா டமுத்தாடவ
னேகவி தந்துந் துமிச்சத்த மாடவிசைபெற்ற
செயதேவதேவ செயலோகநாத
வெனவேதகோடி துதிபாடியாட
வாசவ னுங்கஞ் சனுந்தைக்கும்
படைச்சக்ரா யுதத்தோனொடு
வானவ ருந்தங் கையிற்கொட்டி யாடவொருபக்க
மலர்வாழ்கல்யாணி யயிராணிவாணி
வருசோபனுதி யுடனுடமேவுந்
தேர்முசு குந்தன் பொருந்திக்கும்
பிடத்தப்பா மலிப்பூமியி

லேழுவி டங்கந் தனிற்சுற்றி யாடிமகிழிட்ட
திருமேழல்மீது க்ருபையாகிவாழ்வு
திறமானசேவை தருமடலாளர்
வரியரவாடிய நெடியபூணினர்,
நாரியர் கொஞ்சும் பெதும்பைச்சங்
கிலிக்குக்கா தலித்தேமய
லாகிவ ருஞ்சுந் தரர்க்கொக்க வோதியவருக்கு
நலமார்கனுவி னிடையேகொளாணை
மகிழ்வாயிலேகொ ளெனவோதுபோது
மூதுரை யின்கொண் டிடுஞ்சத்யம்
புரட்டிப்போ னவர்க்கேவிழி
நாள்சில சென்றங் களித்திட்ட சிலர் தமிழ்கற்ற
முனிபார்வைகாண வுமையோடுகூடி
முதுசேவையீயு மணவாளலீலர்
நாளுமு ழங்கும் ப்ரசங்கச்செந்
தமிழ்க்குக்தூ தரைப்போலொரு
வேசித ரும்பெண் பிள்ளைக்கிச்சை பேசும்வசனத்தர்
நறைமாலைசூடி மறைமாலைபாடி

நகுமலையான சிரமாலையாளர்
மழுமறிமானில கவணிபாணியார்,
நாகரி கந்தங் கரம்பைச்செம்
பழத்ததைத்தா ரொடித்தேவெடி
வாளைக ளெங்குங் குதிக்கச்செய் சாலிமுடியிட்டு
நடுமாதரார்க ணிழலாடவாட
நடைநீரிலோடு கயலோடியாட
வாசனை மண்டுஞ் சுகந்தச்சண்
பகத்துச்சோ லையிற்கோகில
மோகவ சந்தன் படைக்கொத்த காளமெனநித்தியம்
வழுவாதுகூவ வழகாயெநாளு
மணமாறிடாத மணிமாடவீதி
நாமக ளுஞ்சென் றுவந்திக்கும்
புதுப்பொற்று மரைப்போதுறை
பூமக ளுங்கொண் டிடப்பெற்ற தூயதிருவொற்றி
நகராளுமீசர் புகழ்சேருலாசர்
நழுவாதநேசர் தொழுத்யாகராசர்
மணிவரைமீதினி லிலகுமாதரீர்,

மாரனெ டுந்தண் டிறங்கிச்சண்
டையிட்டக்கால் முதற்பாளைய

மாகிவ ரும்பெண் களிற்சித்ர மேதனிலமைநிற்கும்
வகையேதுவேறு மிகையேதுகூறு
மயிலேசொலாடு குயிலேமண்மீதும்
சூரில வம்பஞ் சினும்பொய்க்கு
பதத்தைத்தா ழவைத்தீரது

தானென தங்கந் தணைப்பிக்கு மேயினியுமக்கோர்
துணைகாணுநானு மிணைகாணுமேனி
தொடவேணுமேசொ லிடவேணுநீரும்
வாருமி ருங்கண் டுசந்திக்கும்
படிக்குத்தா னடுத்திரொரு

கோடித வந்தந் திடத்தக்க தோபரிமளிக்கு
மலர்வாயைநாடு மளிபோலநாடு
வருமேழையேன்மு னதுநூறல்போல
ஒருமொழியாகிலு மினிதுபேசுமே,
வாழையிளந்தண் டினுஞ்சட்டங்
கொழித்துக்கா மனுக்காலய

தோரண கம்பங் களுக்கொப்ப தாகியதுடைக்குள்
வளராதபோதே னியிர்தேறுமோகொ
ளேழுவாயிலேறு மெழுகாமிவேளை
பாவிய னங்கன் செயுங்கொட்டங்
தனித்துத்தா பரிப்பிரிணி
வேறொரு தஞ்சம் பெறபெற்றி லேனயன்வகுத்த
படிவாகியோவென் விழிவாகியோவு
முடல்வாகியோமெ லிடைபோனதேது
வாடிவ ணங்குந் துரும்புக்குஞ்
சிறுத்தையோ மிடைக்கோவிரு
பாத னங்கொண் டசைபிக்கி றீர்நடைநடக்கில்
மலர்போலுமேனி குழைவாமையோவென்
மடிமீதுவாரு முகசேவைதாரும்
இனியவர்பேரினில் வெகுளிவேணுமோ,
ஆமுடி தின்செங் கரும்பைத்துண்
டமிட்டுக்கோ துவிட்டாடிய
பாகமு திம்பின் குமட்டச்சொல் வீறுரைகொடுக்கி
லதுசேதமோகவ னுடல்வாதமோவெ
ளளவாகினுனு மின்காதகேது

வாயுமி ழூந்தம் பலங்கற்கண்
டதைச்சற்றே யளித்தால்வெகு
நாளள வுந்தொண் டுமக்குசெய் வேனுமதுகிட்ட
வரவோகைலாகு தரவோபெணேச
மதியானவேலை யிடிலேதுமோச
மாரம ணிந்தங் கதம்பச்சந்
தனத்தைப்பூ சிவைத்தால்முலை
யானைம தன்பின் பிடிக்கொட்டு மோவதுபிடிக்க
வடியேனிதோகை நகமார்குடாரி
யதுபோடவேணு மிதமாகவேணும்
இதுபொழுதேயதை யறியலாகுமே,
ஆய்வளை யுந்தொங் கலுங்கொப்பும்
பதக்கச்சோ டுமுத்தாரமு
மேகலை யுஞ்சங் கிலிக்கொத்து மாலையுமுனிட்ட
வடையாளமாக வுடனுடுமாத
ரறியாமலேகை புனைவேனலாது
சோடுகி ளம்பும் பசும்பொற்குன்
றினுக்குக்கீ ழிடத்தேயொரு

நாகத லங்கண் டதனிற்கை யாடியொருமித்த
சுகமார்புளோசை யிருநாலுமாட
விழிவேல்களாட வெழில்வேர்வையாட
வாகமி ரண்டுங் குலுங்கப்பம்
பரத்தைப்போ லவொத்தாடிய
கேளியி லென்றன் சமர்த்தைக்கை பாருமனதுக்கு
ளதன்மேலென்வேலை வெளியாகுநீரு
மதைநாடநாட வெனைநாடுவீர்மெய்
அதுவுமிலாவிடின் மடலையீயுமே

புஷ்பவனநாதர் வண்ணம்.

இராகம் - நாதநாமக்கிரியை - தாளம் ஆதி.

தானதத்த தத்ததத்த தானதத்த தத்ததத்த
தானதத்த தத்ததத்த தானதத்த தத்ததத்த
தனத்தன தந்ததன தனத்தன தந்ததன
தனத்தன தந்ததன தனத்தன தந்ததன
தானதன தானதன தானதான
தானதன தானதன தத்ததனதான
தனதான தனனதன தானனா.

காரணப்ர சித்தவத்து ஞானவித்து நித்தியக்ரு
பாசமுத்ர நிட்களப்ர காசரத்ன வற்புதப்பொன்
மறைப்பொருள் நம்புமடி யவர்க்கவர் சிந்தைபணி
விளக்குமெ யன்புதனில் முளைத்தெழு
[கின்றபரி]
பூரணசு கோதயவி னோதநவ நீதவடி
வாகியம னேகரப ரப்ரமவிலாசர்,
ஆதிவிட்ணு வுக்குமிக்க நாண்முகத்த வற்குமுற்றெய்
தாயலர்ப்ப தத்தர்சித்த ராகிமெச்சு புத்திபத்தி

மிகுத்தரு ளும்பொனனை மனைக்குள ழுந்தருளி
நிறைப்பொ னிறைந்ததிரு வுருக்கொள
[வன்றரச]
வாதவினை யாடல்பணி யேபுலகெ லாமறிய
வேயிருக போலமுந கக்குறிகொள்நாதர்
காதலுற்ற ளித்தநற்பி தாவினத்தி யைக்குடத்தி
லேயெடுத்து வைத் ருட்செய் காசியைக்கு
[றித்துளிச்சை]
சிறக்கவ ருந்தருமன் மகிழ்ச்சிபொ ருந்தியதி
சயிக்கமெ ங்கமல ரெனத்திக ழும்படியி
ஞலிதுவ லோபெரிய காசியென வேதுதிசெய்
தாடிவரு போதினில யிக்யமருளீசர்,
மகமாயி யழகியமின் மேவுவோர்,
காதலித்து நித்தமுற்ற காசியிற்க தித்தபுட்ப
கானகத்தி னிற்றருக்கு மானிடப்ப ரப்புமற்றை
யனைத்துயி ரும்பெரிய கிருபைச்சிவ லிங்கவடி
வெனச்சொலி யன்பினொடு ப்ரதட்சணம்வந்தருன
சூரியனு மாமதியு மாகவெளி மீதுவழி
தான்விலகி யோடவருள் வைத்துறுவிசேடர்

பாதகத்தொ ழிற்செய்தக்கன் வேள்வியிற்ற கப்பனட்பி
னூலடுத்து வட்டமிக்க பாவம்விட்டி டத்தலத்தில்
மலர்த்தரு வொன்றுகொடு பதித்துவி ரும்பியுமை
வளர்க்கவ ளர்ந்தருளும் விருட்சம தன்கணவள்
மாதபசு மேதகவொ ராயிரம தாம்வருட
நீடிவரு தேவவரு டத்தில்முயல்போது
கார்கொள்கற்ப கத்தருத்த னீழலிற்கி ரிப்பெண்மெச்ச
வேழுளைத்த கர்த்தர்செப்பு மூவர்சொற்ற மிழ்த்துதிக்க
விருப்பொடு வந்துவைவை மணற்சிவ லிங்கமென
மனத்தெணி முன்புவட கரைக்கவர் நின்று தமிழ்
பாடுபொழு தேயிடப மாமுதுகு சாயும் வகை
யேசெய்துமுன் மூவர்தெரி சிக்கமகிழ்நேசர்
நடராசர் கனகசபை போலவே,
நேரிருப்ப கத்தில்மிக்க கோள்கள்வக்கி ரிக்கவட்ட
மாநிளப்ப ரப்பினுக்குள் வான்மழைப்பி றப்பதற்கு
விடப்பனி ரண்டெனும் வருடக்கன பஞ்சமுனம்
வரத்தரை யின்பயிர்க ளிறக்கவொர் பண்பலரி
வோதனி லோர்தவளை வாழவத னுலதுப
டாதுநெடு நாள்வரைய தற்கதுறவாகி

வாசமிக்கொர்புட்பநித்த மேவவிச்சை வைத்தெடுத்து
வான்மதிச்சடைக்குள்வைக்க வேமிகப்ரியத்தொடத்த
வளைக்கருள் கொண்டசுரர் குலத்தில்விளங்கவரம்
அளித்துமு குந்தன்முதல் வெருக்கொள்ச
[லந்தரன்ம]

காவசுர னுகவொரு நாமமியல் பாவருள
வேபவன்ம காகருவ முற்றுவெதுதேவர்
நீர்மையைப் பகைத்தழித்துமால்வெளிக்கிரிப்புறத்தில்
மேவமெத்த வித்தவிப்ரர் போலவுற்றொர் சக்கரத்தின்
உருப்புவி யின்கணெதிர் கிழித்ததை
[யென்றலையில்]

எடுத்துவை யென்றுசொலி எதிர்த்தசலந்தரன
தாகமிரு கூறுசெய்து மாமலிர்மு னியுமத
னூவுரிய பூவைநகர் முத்தியருளீசர்
நளாரச னுடையகரி சாடுவோர்,

நீடொளிப்ப கற்குநித்த மாழியொற்றை யிட்டிசைத்த
தேரிழுத்தி ழுத்திளைத்து வாவுபச்சை மெய்ப்பரிக்கு
வருத்தமி சைந்தவெகு தவிப்பொழு கின்றபடி
செழிப்பின் வளர்ந்துநிழல்கொடுத்தப சுந்தழைகள்

சோலையிடை யேகவிகள் பாயிபொழு
[தேறுகனி]

யூறிராத மோடிவய விற்பெருகிநாளு

மீறுநெற்க திர்க்குள்முத்து மூருநத்தி னத்தின்முத்தும்
நீரினிற்கு ளிக்குமைக்க ளரிதழ்க்க ணிக்குள்முத்து
மிகப்ரபை கொண்டுமதி நிகர்ப்பது கண்டு திகழ்
பகற்பொழு துங்குமுத மலர்ப்பொலி யுங்கனத
டாகமதி லேபுகுநல் மேதியது பால்மடியில்
வாளைநெடு வால்களடி பட்டிடவ்நேரம்

நீள்முலைச்சு ரப்புமிக்க பீர்விடக்க நித்தபுஷ்ப
வாவியைப்பெ ருக்கமெச்சு பாலினற்ச முத்ரமொக்கு
மகத்வமி குந்தசிவ தலத்தினில் முந்துதல
மெனச்சொலி நின்றுமகிழ் சகத்தினில் வந்தசிவ
லோகமிதுவே யெனமெல் நான்மறைசொல்
[பூவைவள]

மாநகரில் மேவிவளர் புஷ்பவனநாதர்
மதிமேவு பொதியவரை மீதிலே,

மேருவெற்ப டுத்தசத்த சாகரப்ப ரப்பிலுற்ற
பூதலத்தி லிப்படிப்பெ ணேதுசொர்க்க மூற்றிருக்கும்

ரதிப்பெணி லிந்த்ரன்மகள் துரைப்பெணி
[லந்தவுரு]
வசிப்பெணில் ரம்பையெனு நயப்பெணில்
[வஞ்சியிவள்]
தானொருபெ ணாகுமதி ரூபமும்வை
[போகமும்வி]
னோதமுமெய் தானெனநி னைத்தபொழு தேதமி
ழர்பதத்தை யிப்புவிக்குள் மீதுவைத்த லட்சணத்தி
னிலத்து நித்தமெய்ப்பெ ணாமெனத்தி ரப்படுத்தி
யடுத்திட நின்றெனது தவப்பல னுங்கலையெ
னிடத்தினி லிங்குவர விடுத்தது வந்துகையி
லாகுதா வோமுலைக ளோபெரிய நூலினிடை
நோகுமினி நீர்நிலையி னிற்கிறதொ ணாது
மீறிவட்ட மிட்டசெப்பி னோடெதிர்த்த நிக்ரமித்த
ஆனைமத்த கத்தையொத்த மார்பினிற்பு டைத்தகுத்து
முலைக்கொரு கும்பிடுமை விழிக்கொரு
[கும்பிடுபொ]
னடிக்கொரு கும்பிடுபு னகைக்கொரு கும்பிடது
போடுவது பாருமொரு வாசகமே
[னோடுரைசெய்]

தாலுமதில் வாயிலுள முத்துநிருமோசொல்
எனும்வேளை முறுவல்விளையாடினள்,
மேவுதற்கு வைத்தபட்ச மீதெனக்குறிப்புணர்ந்தி
ஞரெனக்க ருத்தில்வைத்த நேரமெச்ச வெச்சரிக்கை
சொலச்சொல வெண்கையது பிடித்துநடந்து
[வெகு]
மகிழ்ச்சிய டைந்துமலர் பரப்பிய மஞ்சமிசை
யேறியொயி லாயொருகு மீதுமயல்
[சாய்பொழுது]
தூயுபனி நீர்மெய்துளி ரக்குளிரவீசி
மேகமொத்த மைக்குழற்கை யால்வகுப்பெ
[டுத்துவைக்கு]
மாலைபைத்த ரித்துமிக்க பாகுவெற்றி லைச்சுருட்கள்
கொடுத்திட மென்றுகவு ளொதுக்கிய தம்பலமு
மெனக்கவ டந்துசரி சனத்தொடு சிந்தையமெ
லாமுனது மீதிலட சாமியிது வேளையினி
நீமருவ வாவெனவு ரைப்பள்முலைமுடு
மேல்ரவிக்கை யைக்கைதொட்டு நானெகிழ்த்த
[மட்டினிற்கு[
பீரெனக்க தித்தபச்சை வாடையட்ட திக்குமுட்டி

மணத்திடும் விந்தையதா சொல்ச்சர சங்கவிசை
மிகுத்தப தங்கள்வெகு கவித்துறை சிந்துபல
தாழிசைகள் தாயின்மக ளேசல்மடல்
[கோவைவண]
மேசொலுவள் கூவுகுயி லுக்குநிகராகி
அநுராக மதனரதி போலவே,
வாரணத்த னத்தைவைத்தென் மார்பினிற்ப
[தித்திருக்கி]
வாள்விழிப்ப கட்டின்மெய்க்கு ளாவியைப்ப
[றிப்பள்கட்டி]
நெருக்குவள் செங்கைகொடு செருக்குவ
[ளன்புசொலி]
யுருக்குவ ளின்பமயல் பெருக்குவள் கொஞ்சிமடி
மேல்விழுவள் நீ புருஷ வேசைபரி யாசமல
டாநிசம டாவெனவ டிக்கடிவிஞ்ஞ
மாயுரைப்பள் மெத்தமுத்த மோகனச்சி றக்கிநிட்ட
மாயொருக்க னித்துமிக்க கால்கணிப்பி ணிப்பினிச்செ
விதழ்க்கடி யென்பளிரு துடைக்கணி
[மிண்டுவளை]

ளிடுப்பின கங்கள்பட வழுத் தூவள் கும்பமுலை
தான்விரலி ஞெனெருடி நீபிடிவி டாமல்லபல்
மீறுதட டாவெனம யக்குவள்கிரீடி
மாரபொக்கி ஷத்தினுட்கை போடமெய்ச்சி
[ஞுக்கமிச்ச]
மாகிவெட்க முற்றுளத்தி ஞணமக்க ணத்தில்விட்டு
முடுக்குவள் வஞ்சிமலர் முகத்தொரு சந்த்ரகலை
பிறக்கம லர்ந்துகரி கரத்தைவி ரைந்துசெய
டாவெனவு மேசெயவு மேதமிகு பீரெனவு
மேவுவள நேரமெனை முத்தமிடுவாள்பின்
அதிமோக தாகமிக வாடுவாள்,
வாலிபப்பெ ணிற்றுரைப்பெ ஞேர்கணத் தினிற்றியக்க
சோபமுற்றும் விட்டுவிட்டு மேல்கொளச்சோ
[லிக்கரைப்ப]
ளணைக்குள ணைந்தபொழு தரைக்குளி
[ருந்தமுகிழ்]
விரித்திட வந்ததுமிகு முக்குமெ னுங்குமிழி
மேல்வருப்ர வாகமென வாகிமிக வேகியிரு
காலிணையு ளோடுமறி பட்டதுநிலாம

சேலாடவப்பு றத்தினுக்குண் மாமகிழ்ச்சி யைக்கருத்து
ளேயடக்கி வைத்துமைக்க ணன்முலைக்க ணைப்பசப்பி
யிடுப்பு மிகுந்துகடு கடுக்குது சந்துதுடை
வலிக்குதெ ழுந்திரென வுறுக்குவள் வம்பிகன
மோடிபணு வாள்பினுட னேமருவி
[யோர்விசைச]
லாபமொடு காரியந டத்துமுபசாரி
வார்நடற்ச கத்தினுக்கு ணீசமர்த்த னுத்தரிக்க
நானொருத்தி நற்பெணுக்கு ளேசமர்த்தி கெட்டிகெட்டி
யெனச்சொலி யென்றனிரு கதுப்பினை
[மென்றுமத]
மெழுப்புவள் பின்புதன தனத்தன வென்றுபரி
லீலைபுரி வாளிவள்சை யோகசுக மாறிவர்
கோபியர்க ளோடுபுணர்
[கிருஷ்ணாறிவார்முன்]
மறவாது வனிதையனு போகமே.

இராஜமன்னார் கோயிற்

செண்டலங்காரப்

பெருமாள் வண்ணம்.

இராகம் - புன்னாகவராளி - தாளம் - ஆதி.

தானனதந்தனனா-தனதானதந்தனனா-தன
தானதந்தன தானதந்தன தானதந்தன தந்ததந்தான
தனதன தன்னனதனனா

வேலைநெடுந்திரையா-கிய பாய்விரிந்ததிலே-நிமி
ராயிரம்பட நாகபஞ்சணை மீதுறங்கிய நன்பரந்தாமர்
சீர்பெறுபஞ்சவரோ-விய காரியஞ்சொலவே-துரி
யோதனன்சபை யூடுசென்றிரு கால்வருந்தந
டந்திடுதூதர்
வீறுசெயுங்கனகா-சுர னாவிபொன்றிடவே-கையி
னுலறைந்திடு தூணில்வந்தரி யேறெனும்படி
[நின்றசங்ராமர்]
இலகிய பொன்னுடைபுனைவார்,
வீசுதடக்கையிலே-சுட ராழிசங்குடையார்-குரு

கூரில்நஞ்சட கோபர்முன்சொன பாடலின்பமு
[கந்திடுங்காதர்]
ராவணகும்பகனு-தியர் போய்மடிந்திடவே-உயர்
ஞாலமுன்பிண மாய்நிறைந்தபி ணணிறங்கிநி
[மிர்ந்ததின்சாபர்]
மேதினியெங்கணுமோ-ரடி யாலளந்தருள்வார்-
[தனி]
மூலமென்றொரு காலியம்பிய வாரணந்தனை
[யஞ்சலென்றூளும்]
இணையெழுத வொண்ணுதவடிவார்,
ஆலநெடுஞ்சிலையா-ளிக லாகுடுந்தெய்வமோ-கினி
யாகிவந்தும காதவஞ்செய்த பேர்மயங்கந
[டந்தசிங்காரர்]
மார்புநிறைந்துகுலா-வுது ழாயலங்கலினு-மொரு
காளிகன்பட மீதுநின்றுல கேழுமஞ்சந
[டஞ்செயும்பாதர்]
ஆதியொடந்தமிலா-வெளி யாயகண்டிதமா-யனு
வாகிநின்றுச ராசரப்பல வாகியெங்குநி
[றைந்தபண்பாளர்]
அனுபவ மென்னுவியணைவார்,

ஆழிநெடும் புனலூ-டுவ ரால்நிறைந்திடுபூ-கத
மாரிசிந்திநி லாவிழுங்கிய போதுகொண்டலின்
[மண்டலஞ்சாய]
மோதுதல்பண்டொருநாள்-நவ நீதமுண்டபிரான்-நல
சோதைகண்டுதன் மோர்கடைந்திடு
[கோல்கொடன்றடி யுந்து பண்பாகும்]
ஆதிவிளங்குறுமால்-பிர தானமங்கையில்வா-மலர்
மேலுமங்கைம ணாளரெங்களையாளவந்தருள்
[செண்டலங்காரர்]
அழகிய மன்னார் தம்வரைவாய்,

பாலைவனந்தனிலே-ஒரு பாதகன்பிறகே-மகள்

போனவிந்திர சாலமெந்தவு பாயமொன்றும
[றிந்திலன்பாவி]
ஆர்செய்தவஞ்சனையோ-
[வினையால்விளைந்ததுவோ-அயல்]

வீடுகண்டறி யாள்கலந்தவ ளோடிணங்கவு
[டந்தையிங்கேது]
பாரமறிந்தவளோ-சொல்பி ராயமொன்பதலோ-
[மல]

டாயிருந்தவெ னேழைகும்பியில்நீலிவந்துபி
[றந்ததென்பாவம்]
வெயிலெழு மந்நேரமெளிதோ,

பாதைசுடுஞ்சுடுமே-மகள் பாதமென்படுமோ-படு
பாதிமுந்தியில் மீதுநின்றங னேதியங்கிவி
[ழுந்திடும்பேசு]
பூவையுமிங்குளதே-கிளி தானுமங்கிலையே-அலை
வாய்வரும்பொழு தோடிவந்துவி டாய்தணிந்திட
[வென்சொலுங்கூகை]
பாவைபிரிந்தனளே-பழி யேநினைந்தனளே-கதை
யோகொடுங்கலி யோகுழந்தையி லேவிளைந்தது
[நன்றுவெங்காமம்]
அரிகரி பெண்ணுசைகொடிதே,

மாலையிலுஞ்சிறு-காலையு மூழ்கியன்புடனே-தரை
மீதினுண்டவ ளாயருந்தவ மேபுரிந்துபி
[றந்தநன்பேறு]
தாயைமறந்தனளே-ஆய லாலைநம்பினளே-மத
யானையின்படி யானைகண்டக ணுவியம்பின
[ளந்தியம்போது]

பூமனையான் றினிலே-கிளை
[யாளர்தங்கள்முனே-கலி]
யாணமுஞ்செயதொ ராசைகண்டில ஞலிரண்டுபி
[றந்ததுண்டேரபெண்]
ஒருமக ளொண்ணுதுபெறவே,

வாசல்கடந்தளவே-வெகுதூரம்
[வந்தவள்போ-னம]
தூரில்வந்தில மோவெனென்றறி யாமல்நின்றுபு
[லம்புமென்பேதை]
காடுகள்வெந்ததிலே-கம ராய்விரிந்திடுமே-யதி
லேபதுங்கிய மாசுணம்புரி போலவெந்துசு
[ருண்டவெங்கானில்
பாதநடந்தனளே-யென காரணந்தெய்வமே-
[இனி]
யாரைநொந்துப்ர யோசனந்தனி யேகிடந்துபு
[லம்புமென்ப்ராணன்]
விதியிது கன்மானுபவமே.

இராமேச்சுரத்து

இராமநாயகர் வண்ணம்.

இராகம் - புன்னாகவராளி - தாளம் - ஆதி.

தனதனத்தன தானதந்தன தனதனதத்தன தானதந்தன

தனனதனனதன தனனதனனதன

தனனதனனதன தானதானன

தானதன தந்ததன தானனா.

பகவதிநித்யகல் யாணிசங்கரி

பயிரவிநிக்ரக காளியந்தரி

உலகுகிடுகிடென மயிடன்முடிமின்மிசை

நடனமிடிகவுரி நாகபூஷணி

சரஸ்வதிலட்சுமி தேவிகும்பிடு

மிருசரணத்திரி சூலிகண்டகி

பதரியலகைசில கதரியிணையுகிரி

லுதறியெறியுமொரு பூதவாகினி

பருவதவர்த்தனி யாதிசுந்தரி

அனுபவியுத்தமி நாககங்கணி

அருண வெயிலொழுகு தருணவடிவழகி
கருணை நிருவுருவ மானகாரணி
தேவியொரு பங்கிலுறை நாதனார்.

பகடுநடத்திய காலனெஞ்சக
முறியவுதைத்திடு பாதபங்கயா
மதனுமவனுடைய சிலையும்வடிவழகும்
எரியஅழல்விசிறு பாலலோசனர்
அமுதுபிறக்குமு னேகருங்கடல்
யெயிறுகிழித்தெழும் ஆலமுண்டவர்
சனகர்முதலினர்கள் பரவவடதருவி
னிழலிலுறையுமொரு ஞானதேசிகர்
பவளவிதழ்க்குள்வெண் மூரல்கொண்டுமுன்
அடையலர்முப்புரம் நீறுகண்டவர்
உபயகடநடுவில் முழுகியழகியச
னிநியில்வருபவர்செய் பாவமோசனர்
வாசமிகு கொன்றைமலர் மாலையார்.

மகதர்துலுக்கர்ம ராடர்சிங்களர்
குகுதர்களொட்டியகர் குடர்கொங்கணர்

வடுகர்குடகரொடு நிடதர்மகுடமுடி
வருடுபதயுகள ராஜசேகரி
எழுபதுலட்சது பாகிமண்டிய
புகையிலதிப்ரமை யால்மயங்கிய
அடைபலர்கொடிமதில் இடிபடிநடவிய
த்ரிமதகடகரட யானையானெழில்
வனருகலட்சுமி தேவிதங்கிய
இரணியகர்ப்பசு தாகரன்செய
நரபதிகசபதி செயபதிதனபதி
ரவிகுலபகிரகு நாதபூபதி
சேதுபதி நம்புமிரு தாளினூர்.
வனசமலர்ப்பொலி சீதையென்றிடு
திருமகளைக்கொடு போமிலங்கையில்
அரசனவனுடைய தலைமகனடுமக
னிளையமகனொடுபல் கோடி சேனைகள்
முழுதுமறுத்தெதி ராடுகும்பக
றனையும்வதைத்துவி பீஷணன்றனை
அரசுநிறுவியொரு சனகிசிறையைவிட
மகாசலதிதனில் ஆதிநாளையில்

மலைகொடணைத்தருள் சேதுபந்தன
ரகுபதியர்ச்சனை யால்விளங்கிய
பொழுதில்மனமுருகி அதிகவரமுதவு
கருணைபொழிவரத ராமநாயக
வாழ்வுபெறு செம்பொன்வரை மீதிலே.

விகசிதபுட்பவி தானமஞ்சமும்
நறுமலர்மெத்தையும் நூறுபொன்பெறு
தழுவணையுமொழுகு மிலகுமணவரையில்
வருவள்கலபமயில் போலுலாவுவள்
சரிகைசாவிக்கையு ளேபிதுங்கிய
முலைகளிலெத்தனை சோபையங்கவர்
சவளிநடுவிலொளி பளபளெனவொளிரும்
வயிரவிலையதொரு நூறுகோடிபொன்
விசிறிசுழற்றிய கோலமுன்கையில்
வளையல்மயக்குது பாவிசிந்தையை
இடையழகிலுமவ ளுடையழகிலுமிரு
தொடையழகிலுமயல் மீறுதேமனம்
வேறுமொரு பெண்களையு நாடுமோ.

விரகமெனக்கமை யாமல்முந்தியை
வலியவிழுத்துமு னேசிணுங்கியென்
மடியில்விழுவள்புனை சலவைவுரிவளதில்
வெளிகள்தெரியுமிகு ரோமரேகைகள்
கவுனைநெரிக்கையி லேரசம்பெறு
மிதழையருத்துவ நீயிதங்கொடு
முலையின்முலையைமெல நெருடுநெருடுமென
மழலைமொழியிடைவி டாதுபேசுவள்
விடுவிடுசற்றென மேலெழும்புவள்
உபரிதொடுத்தன னேயிறங்குவள்
அமளிமிசைதுவள்வ ளிடையிலிடையிலொரு
கலகமிடுவளுற வாவள்மீளவும்
மோகமது கண்டதிலை ராமனே,
முகமதியிற்குரு வேர்வரும்பிட
அழகுசனித்ததெய் வீகமென்சொல்க
உடலமுழுதும்வளர் புளகமெழமிகவும்
எனதுசெவியுள்நுனி நாவில்நீவுவர்
கடிதடமத்தியி னூடிருந்திடு
மணியையசைக்கையி லேகனிந்ததில்

அமிர் தமிள்கிவர வுலையிலிடுமெழுகி
னுருகிருயுகிவெகு தாகமீறுவள்
முடியில்வலக்கைப ளீரெனும்பொழு
தடலிலெனக்குசி லீரெனும்படி
இடதுகையில்முதுகு தடவியெனவலிய
வலியமருவுவள்பி னேதுதாமதம்
மாமதன் சண்டைவெகு தூளியே,
மொகுமொகெனத்தொனி நீடுமென்குரல்
கமுகுலெழுப்புவள் பாததண்டைகள்
ஒலிகள்கதரியிட வளைகள்சிதறமிகு
வுனதமயிரின்முடி பூசலாடிட
கடினபுணர்ச்சியி லேமகிழ்ந்திரு
தொடையைமலர்த்துவள் போகம்வந்தது
சமயமிதுசமய முனதுவசமெனுயிர்
பதனமெனமொழிவள் நாணவேளையில்
மூலையைமுகக்குமு னேபதிந்தது
பிடரிநகக்குறி கோடியுண்டிரு
மனதுமகிழ்வுபெற ரதியும தனுமென
பருவுகலவிசரி போகமாய்வரு
சாமரச நெஞ்சில்மற வாததே.

அண்ணாமலையார்
வண்ணம்.

இராகம் - புன்னாகவராளி - தாளம் - ஆதி.

தனத்தான தனன்தன தனத்தான தனனதன
தனத்தான தனனதன தந்ததனனா
தனனதனதான தானதனனா.

சிலைக்காம னுடலெரிய விழித்தாடல் புரிபரமர்
செருக்கோல நமதுயிரை யுண்டசரணார்
மலர்ப்பாவை வருசகல கலைப்பாவை தொழுபசிய
மலைப்பாவை கவுரியொரு பங்கிலுறைவார்
சினத்தாலு மிகவுமெதிர் விழித்தாலு முனிவினொடு
சிரித்தாலும் அழல்வடிவு கொண்டபரனார்
அரவுகுடியேறு நீடுகுழையார்,

திருக்கோயில் திருவதிகை திருச்சேய்ஞல் திருமருகல்
திருத்தோணி திருவாலந வஞ்சிபனையூர்
திருச்சேலூற தருமபுர மறைக்காடு திருமயிலை
திருக்கோவல் திலைநகரம் அன்பில்கடவூர்

திருக்காவை பொதியமலை கழிப்பாலை கயிலைமலை
தெளிச்சேரி யிடைமருது தஞ்சைவழுவூர்
சுழியல்புனவாயில் கூடலுறைவார்,
புலித்தோலி னுடையழகர் பலிக்கேகு நடையழகர்
பொடிப்பூசு நுதலழகர் செங்கைமழுவார்
நெருப்பாறு வரும்வழியில் மயிர்ப்பால மெனுமனதில்
நினைப்பார்கள் வினைகளையும் எங்கள்பரனூர்
புயத்தோடு நெடியவரை யெடுத்தானை வெகுளியொடு
புடைத்தானை யுரியையணி கொண்டதிறலார்
குமுதமலர்மாலை சூடுசடையார்,
புகைப்போல எழுபடல் முகிற்கூட மிடறிவிழு
பொழிற்கூடு வளர்கமுகு நின்றநிலையே
குருத்தோடு மிடறொடிய முடத்தாழை விரியவெதிர்
குதித்தோடி வருகயல்கள் துன்றுவயல்சூழ்
புகழ்ச்சோண கிரியிறைவர் விடைப்பாகர் அமரர்விழி
புதைத்தேபி னிருகைதொழும் அங்கிவடிவார்
தடவரைபெணவி போலுமயிலார்,
மலைப்பார மெனவளரு முலைப்பார மெழுதிடினும்
வளத்தோடு பெருகுணமி ரண்டும்வருமோ

விருப்பான கரியகுழல் இருட்போல வெழுதிடினு
மிகுத்தேறு வரியளிமு ரன்றுவருமோ
மதர்ப்பான விணைவிழிகள் வடுப்போல வெழுதிடினும்
மடப்பார்வை யிருகுழைக டந்துவருமோ
குழையெழுதிலூச லாடிவருமோ,

மலர்த்தாளை வனசமலர் தனைப்போல வெழுதிடினும்
மலர்ப்பாய லனமென நடந்துவருமே
உறுப்பான திலகநுதல் விதப்போல வெழுதிடினும்
உவப்பான குறுவியர்வ ரும்பிவருமோ
வரிக்கோல மிடறுகமு கினைப்போல வெழுதிடினும்
மாப்பாவை யுருகுமிசை யின்பம்வருமோ
விரலெழுதில்வீணை பேசவருமோ,

இலைப்பாதி யிழையுமென நுசுப்பாக வெழுதிடினு
மிதைப்போல வொசிவொடுத ளர்ந்துவருமோ
வனப்பேறு திகிரியென மணித்தோள்க ளெழுதிடினு
மயிர்க்கால்கள் புளகிதமெ றிந்துவருமோ
இதழ்க்கோவை யதனைமிகு சிவப்பாக வெழுதிடினு
மிளைப்பான பொழுதமுது வந்துதருமோ
உகிரெழுதில்மீது லாவிவருமோ,

எழுத்தோடு முறுவல்முலை நகைக்காச வெழுதிடினும்
எதிர்த்தாடு புலவிநகை இங்குவருமோ
மதிப்பானவுடலையொரு கொடிப்போல வெழுதிடினும்
மயிற்சாய லொருசிறிது தங்கிவருமோ
எடுத்தாடு படமெனஅல் குலைப்பேணி யெழுதிடினும்
இதத்தோடு மழுதுகுநி கொண்டுவருமோ
கிழியெழுநிலேது லாபமுரையீர்.

மூவராயன் வண்ணம்.

இராகம் - புன்னாகவராளி - தாளம் - ஆதி.

தனதன தத்த தான தானன தனத்த தந்த
தனதன தத்த தான தானன தனத்த தந்த
தனனதந்த தந்த தான தனனதந்த தந்த தான
தனனதந்த தந்த தான தனனதந்த தனதன
தனதாந்ததனதான தாத்தன.

ஒளிவரு பச்சை மாலை வாடின தொடைக்கி சைந்த
புதுவயல் வைத்த கோதை நாயகி கருத் துகந்து
விழியுகந்து தந்து தேற லருளுகந்த இன்சொல்
[வாணி]
தமிழுவந்து பண்ட சோதை பூலையுகந்த தயவினன்
எவரையுந டத்தி னுலு மாதரவு பெற்றி ணங்கி
யவரவர் மட்டி லேதராதர நடத்து நண்பன்
இடையில்வந் தடைந்து ளோரு முதலினங்
[கலந்து ளோரு]
மிருமருங் கிருந்து வாழ நடுவிருந்த நிலைமையான்

வருமைப டைத்த வீடு பாலொடுப் பிக்கிலந்த
மகிமைந மக்கு வீறு வீறெனவ ளர்த்த கொண்டல்
வெடுவெடென் றவன்சொ லோசை கனவிலும்
[பிறந்திடாது]
வெகுரசம பிறந்த வாயி னகைபுரிந்த லலிதவான்
இகல்வேந்தர் தொழுசேனை மூர்க்கவான்,

விரிகடல் வட்ட மேழு தீவும திரத்து ரங்க
வடகன வட்ட மேறி வாளர சரைத்து றந்து
வினையரண் பிடுங்கி நாக முடியலைந் துலைந்து போக
வலமிடந்தி ரும்பி யாடு பவுரிகொண்ட லகிரியான்
மலைபுமெ திர்த்த வேளை யோர்மசக மொக்கு மென்று
மனதுபெ லத்த வீர சாதனைசெ லுத்து சிங்கம்
வடகலிங்கர் வங்கர் சீனர் குகுதர்கொங் கர்சங்
[கர்சேரர்]
வகைவிளங் கவந்த ராசர் தொகைவிளந்த
[கொலுவினன்
விசையம கட்கு மாவி ஞமலர்கள் மட்ட லர்ந்த
தளவுகொ டுத்த மாலை தோளிலிடு முக்ர துங்கன்

விசிறுதென்றல் மன்றல் வீசு கவரிநின்ற லம்ப நூறு
பரிசைசென்று கண்ட ராசர் பணியவந்த
[சிவிகையான்]
இசைதாங்கு கவிமாலை சூட்டினோன்,
எளியவ ரைப்பிர தாப ராசரென நட்டதன்றி
வலியவ ரைப்பிர சாத ராயுழல விட்டவென்றி
எழில்சிலப்பு நின்று லாவு விருதுதண்டை
[யொன்று பாத]
சிறுசதங்கை பொன்று தாய ரணியுமுந்தி யணியுமால்
மதுரமி குந்த பாகு சாரமத னிற்சி றந்த
பொருளறி நற்பிர தாப நூல்பல தமிழ்ப்ர சங்கி
மனிதரொன் றிருந்தலோப குடிதிறம்பு வஞ்சர் காண
உலகமெங்க ணுந்தி யாக பிரபலஞ்செய் புகழினோன்
எழுதரி யிட்ட நாள்வெ ளேடெழுது சட்ட மிஞ்சி
நவரச மிட்ட வோலை மேல்வரியி லிட்ட நண்ப
னினியநன் குணன்சு பால பரிசனங்க ளின்ப மேரு
வினைநலங் கனந்த ராசு நிறைபினின்ற
[பெருமையான்]
மகிழ்சாந்த யணவாள னாட்கொள்வோன்,

இரசித சித்ர கூட மாளிகை முகப்ப டர்ந்த
பகலவ னொற்றை யாழி தோரண மறுத்த கம்ப
மிடைதவழ்ந்து பஞ்ச பாணி குடையிதென்
[றியம்ப வானி]
லிரவுவந்த திங்கள் போல விடியவந்த நிலவுகால்
வரியளி தொட்டி லாடு தாமரை முகப்பில் வந்து
சுரிமுக நெற்றி மீது நாளுமடி பட்டு நொந்து
வயவுகொண்ட பண்டி யோசை குமுகுமென்று
[தொண்டையூதி]
வளர்கிடந்த வம்பி யேறி மடைதிறந்த நெடியகால்
இருகரையு முத்து வீசு வீரநக வைப்பு ரந்த
திருமலை முத்து வீர மூவரையன் மைந்த னன்பொ
னிமயமுங்கு லுங்க வீறு புயமணிந் திடுங்கு மார
னிணையில்ரங்க னெங்க ளுன தமயனெங்கள்
[புணரியான்]
வளமோங்கு களவேள்வி நாட்டிலே,

ஒளிவிடு முத்த டமெ ணேயுனது பற்சி வந்த
பவளமு மொத்தி ரா தடயுனித முக்கு வஞ்ச
மூடையமிஞ்சு நஞ்ச டக ணினியமென் கரும்ப
[டசொ]

லழகுகந்த மந்த காச முயிரையுண்ட நயனமு
சிறுபிறை யொப்ப முசெ வாணுதல் மணத்த கந்த
பொடியிடு செப்ப முபொ னாபரண மிட்ட கொங்கை
செறிசெறிந்த விந்தை யான சொருகு கொண்டை
[மஞ்ச முயி]
ளிசைமுழங்கு மெண்பு ளோசை குமுறுசங்க
[மிட றமு]
யுதாத லத்தின் மீறு ரோமவரை சிற்றெ றும்பு
சரிரமெ ழுக்க முபு ளீரமப மற்ற வம்பி
யுனதுநெஞ் சிநம்ப முமி னிடைதுவண்ட
[கொம்ப முமெ]
லடிகள்பஞ்ச பஞ்சமு யென் மனதுபந்த மெழுகமு
சகிவேண்டி லெனைவார மாக்கமு,
உடையை நெகிழ்க்க வோக ஞெடிநிழ லொத்தி லங்கு
மரவப டத்தை மூட வோதுடி துடிக்கு தென்கை
உபயமென் குறங்கின் மார நபிநயந்தொ டங்க
[வோமெல்]
விரலரும்பு கொண்டுநாபி மலர்வளைந்து குடையவோ
செவிமட லுக்கு ளேயெ னுவினுனி யிட்ட ளைந்து
புளகமெ ழுப்ப வோப லாவிருக துப்பை மென்று

திரள்பழங் கனிந்த கோவை யிதழ்விளிம்பை
[யுண்க வோசொ]
லணியிலங் கனங்க ராச கலைநகங்கொ டெழுதவோ
உடலை யிறுக்க வோசெ வேமலைக ளொத்த கொங்கை
யொருகு கொடுக்க வோக ணேயுன்முக முத்த ரும்பி
யொழுகுதென்று கொஞ்ச வோவு னுடன்மகிழ்ந்து
[கெஞ்சவோ சொல்]
புளகிதஞ்செ றிந்து மேவ கரிகரஞ்செய் தலைய வோ
துடையேந்தி மடிமீதி லேற்றவோ,
நளினமு கத்தின் மோக சேலையு மதற்கி சைந்த
கொடையும ளிக்கு மேயுன் மேனிபத றித்தி யங்கி
நடுவுதொங்கள் விண்ட பூவை யளகபந்தி சிந்து
[மேபொன்]
வளைநெருங்கி முன்கை நீல வளையுடைந்துசிதறுமே
மூட்டணி ரத்ன மாலை சீனமணி யுட்க லந்து
சுவடும முறைக்கு மேம லாடுகுழை யத்தி லங்கு
முலைமுகங் குலுங்கு மேசெ மதிமுகங் குலங்கு
[மேமெ]
யழகுகந்த குந்த ளோலை குழையிறங்கி யுருளுமே
நடுமணி பத்தி பாய ஆடுமொரு சுட்டி தொங்கல்

அகலிய கொப்பு மாடு மேயது மறைக்கி ணங்கி
நடனமிஞ்சு கொஞ்சு காலி லிருசிலம் பலம்பு மேந
முபரியின்ப மின்று காண விழியனந்த மமையுமே
மிகமுண்ட மனதாசை மூட்டுமே.
நயனம டைத்து மூடி நாசியி லுயிர்ப்பி ணங்கி
விரலைம டித்து வாயு லூதியுற மிச்சி ஞுங்கி
நயமுடன் பிணங்கி லீலை புரியுமந் தரங்க மோடி
நினையநொந்து வாட இழைமருங்குல் குழையுமே
படபடென வுச்சி மீதி லேசட சடச்ச டென்று
விழுபதி னெட்டு மேள தாடன மலிந்து பொங்க
திகழ்பழங் குழம்பி யாடு கனதனம்பி துங்கி மார்பி
லுதையநெஞ்சு நைந்து சோர உதையில்மிஞ்சி
[நகரவே]
இருதலை யொத்த காம மார்சல மடைத்தி றந்து
நெடுகவி ரித்த பாயி லேற்றியணை பிறப ரந்து
நறுமணங் கலந்த போதில் உயிரிரண்டு மொன்ற
[தாக]
பரமவின்பம் வந்து மூடு கலவியின்ப மினிதுகாண்
விதிதோன்றி லனுபோகம் வாய்க்குமே.

வண்ணம்.

பெண்கலே.

இராகம் - புன்னாகவராளி - தாளம் - ஆதி.

தனதனனதானதான தனதனனதானதான
தனதனனதானதான தனதனனதானதான
தந்தனதானதான தந்தனதானதான
தந்தனதானதான தந்தனதானதான
தன்னனனா தனத்த தனதனதனா

பருவாதியேசலாப சரசமயிலேவிணுடர்
அமிர் தவடிவேவைபோக ரசகுளிகையேபெணேப்ர
சங்கமடீயுன்மேனி தங்கமடீவில்வேள்க
ளங்கமடீயிதேவி லங்கமடீகுணுளி
மருவின்டீணமேகணேயெ னருமையறியாததேது
கபடமலடீபொயாணை யிடுவதலடீபொருது
வஞ்சமடீயிதேபிர பஞ்சமடீசையோக
புஞ்சமடீயுன்விடு தஞ்சமடீயலாது

பரகதியிலேதுலாப முனதுகனிவாயினூறல்
பருகிலதுகாசியாடி வருவதிலுமாவிசேஷம்
வங்கணமாகவேம ணங்கமழ்பாயல்மீதில்
இங்கிதலீலையேபு ரிந்திடநாணமேவு
பெண்ணரசே மயக்க வசமலவடி,
பவளவிதழோகபோலம் அழகுமுகமோவெனுவி
பருகும்விழியோவெணீறு நுதலினொளியோ
[பொன்மேனி]
மஞ்சளின்வாசமோசெ றிந்திடுதேமலோநெ
ருங்கியமார்பிலேஅ ரும்பொடுநூல்புகாது
கலசமுலையோமெய்ரோம உதரதலமோவின்மார
ணரண்மனைவிலாசமான அரவபடமோகனடி
இங்கொருபாவிநான றிந்தறியாமலேபு
லம்பியபாபதோஷ முன்றனையேவிடாது
பழிவருமடசனேனு னடிமையெனையாளவேனு
மிதுசமயமாகுநாளை யினியுடல்பொருதுகானு
மென்றுசொல் போதிலேந டந்துகைலாகுமீதி
லென்ப்ரமைமதிரமேவு பஞ்சணைமீதுகூடி
நன்னயமாய் மடிக்கு ளவள்விழுகுவாள்,

ஒருசுருளைமாறியிவ ளொருசுருள் தன்வாயிளுெடு
பருகியுமிழ்வாளென்வாயி லதுவயிர் தபானயாகு
மங்களநாதவோசை பெண்குரல்காதிலேநு
ழைந்திடுபோதுதேவ துந்துமிபோலவாகு
முடுகியெதிர்தாடனுறு சடசடெனரோமராசி
புளகம்வருபோதுகாம சனதவெறியேறியாடு
பம்பரமாகவேசு ழன்றுகைகால்விடாது

சந்தொடுசேரவேபு ணர்ந்துகொள்வாள்ப்ரயாசி
ழலுகுதனில்வீழ்வள்சேலை தலைகுலையும்வேளைசோம
னுமிகுவள்பளாசபாசு மூலைநெருடுமேலுமேலும்
விந்தையதாகவேசு கந்தெரியாமல்மாது
பந்தையலீலையேய றிந்தவனாடாசொல்
என்னமுனே யணைத் திறுகியிகலுவாள்,

உபரிதிசேளிகூடி முகமதியில்வேர்வையாட
முதுகுமுழலுசலாட முடிமலர்சள்பாதிசோர
பந்தரபோருவான கொங்கைகளாடவாட
பந்துகள்போலவேமி குந்துசெய்வாள்பொனேலை
பளபளெனபேணிவேர்வை சலசலெனவேசவாது

கமகமெனவேகபோகம் வெதுவெதெனவேமு
[ளுள்செய்]

இங்கிதலீலையோகுழைந்தபொன்மேனியோசி
வந்தகண்வேல்களோசவுந்தரமோடியோவென்
உயிர்பருகும்வாலைமோக ரதிமதனகேளிதேவ
பதவியனுசாரபோக இகபரநல்வாழ்வுதோணும்
வஞ்சியுநானுமாயி ரங்கலிகாலமாய்ம
கிழ்ந்தணையாமலேயி ருந்ததுகாமமாயம்
எண்ணியபோ திருக்கு மனதொருமையே.

வர்ணம்.

பெண்கலை.

இராகம் - புன்னாகவராளி - தாளம் - ஆதி.

தானதந்தனனா-தன தானதந்தனனா-தன
தானதந்தன தானதந்தன
தானதந்தன தந்தனதான
தானான தானதன தானனா.

பூவருந்திருவே-மத னார்தொழுங்குருவே-அனு
போகபஞ்சம தாகிவந்திளை
ஞோர்மயங்கவ ருங்கிளியேயெ
னாசையின்கனியே-யுயிர் போலவுந்தனியே-யெனை
யாளவந்தக ணேயணங்கரா
சேயிணங்குவ தென்றுவில்வேள்செய்
பூசல்கண்டனையே-மதி சூறைகொண்டனையே-அனு
பூதிதந்தடி யேனையுங்குடி
யூழியங்கொள நன்றிதுவேளை
யேனோபெ ணேமனதி லாததே.
போகரஞ்சகியே-அனி யாயவஞ்சகியே-பழி

போடுவன்பழி காரியென்றனை
யாவருஞ்சொல நிந்தனையேறும்

லாடசங்கிலிபோல்-மயல் மூளவும்புலிபோல்-முலை
நாடுமஞ்சளின் வாடைசந்தன
வாடையென்றலை மண்டையினூடு

போயுறுஞ்சுதடி-வசை யூறறிஞ்சுதடி-அடி
போடுமீண்டுசெ யாதுபஞ்சணை
மீதுவந்துக லந்தணையாமல்
ஏதேது தாமசமி தாகுமோ.

கோபமென்சொலடீ-மனம் நீடுவன்கலடீ-வனு
கோரமுன்பெரு மோகம்வந்துநெ
யாய்நிரம்பவே னெஞ்சதுகாமன்

ஓமகுண்டமடீ-யிது தானெர்கண்டமடீ-யினி
யூமைகண்டக னாவினெஞ்சுட
னேபுலம்ப விடும்படியேது

கூடல்கண்டிலையே-மொழி யேதும்விண்டிலையே-ஒரு
கோடிகும்பிடு போடநின்றுப

ராமுகஞ்செய்கு றும்பெனபாவம்
நாளேவி டேனுபர்சை யோகமே,
கோவையின்கனிவாய்-மொழி கூறுநன்கனிவாய்-அனு
கூலமொன் றுமி லாமலிந்திர
சாலவிந்தை செயுந்தொழிலேனுன்
வீடுதஞ்சமட-யிது வேப்ரபஞ்சமட-சன
மேநிறைந்தவு ளூரிலிங்கிது
கேள்வியுண்டுயர் வெம்பனைகோடி
கோடியுண்டடியோ-தெரு வீதியுண்டடியோ-புனை
கோலமென்புலி பூதிகண்டவர்
பேயனென்றிட மன்றினிலேறி
நாளும லூர்வன்மடல் நாளேயே.

திருப்போரூர்

ஆண்டவர் வண்ணம்.

இராகம் - புன்னாகவராளி - தாளம் - ஆதி.

தானத் தந்ததனந் தானத்தன தாந்தந்
தானத் தந்ததனந் தானத்தன தாந்தந்
தன்னதனந்தானந் தன்னதனந்தானந்
தந்தத்தன தந்தத்தன தந்தத்தன தந்தத்தன
தந்தத்தன தந்தத்தன தையத்தன தான
தனனதன தானன தனந்தனு.

பூமிக் கின்புதவுங் காரிற்பொலி வான்சங்
காழிப் புங்கவனுங் காதற்சசி காந்தன்
சொன்மறைமுன்தேரும் தொன்மைசிறந் [தோனும்]
புந்திக்குளி யைந்தெட்டுணை யுந்தட்டற நின்றற்பொடு
சிந்தித்தனர் வந்தித்திடு-வெள்ளிக்கயிலாசர்
காலெட் டுந்தருமம் பாரிற்புரி வான்பண்
டார்வத் தும்பரொடுஞ் சீர்கச்சிபு ளார்ந்தங்
கெண்ணிலிகந்தேறுந் தண்ணளிதந்தாளும்

பண்பிற்செயு மன்பிற்குயர் செங்கைக்கிளி யஞ்சொற்
[பரை]
மஞ்சிற்குல வும்பொற்கிரி-வல்லிக்கொருபாகர்
பூசித் தன்பர்களும் போதத்தவ மாண்பின்
பேறுற் றந்தணரும் பாசத்தடை நீங்குஞ்
சின்மயசம்போகர் தன்னுபரந்தாமம்
பொங்கத்தொடு ணர்ந்தெப்பொழு துந்துய்த்திட
[நண்புற்றணு]
குஞ்சொற்ப்ரண வம்பெட்புறு-சையத்துறைநாதர்
பனகமணி பூஷணர் தருஞ்செவேள்,
பூசைக் கிந்த்ர னுளந் தேறிச்சுனை தோய்ந்தன்
பாயத் தண்சுனையின் போதுற்பல மூன்றும்
பன்னுதினந்தோறும் பொன்னடியின்சூடும்
தொண்டுட்கொடு சிந்தைக்குளு வந்தர்ச்சனைமுந்திச்
[செய]
என்றைக்குமி ருந்துற்றருள்-செல்வத்தணிகேசன்
நீலப்பைஞ்சுனையின் பாலச்சுரர்வேந்துந்
தாலத் தண்டர்களுஞ் சாலப்பதி னென்கென்
றெண்ணுலகந்தாமும் புண்ணியநன்றுகுந்

தஞ்சத்திய லும்பற்றுற வந்திச்சைந யந்தற்புக
கஞ்சத்துத யம்பெட்பொடு-செய்வித்தகசேபன்
பூவிற் பொங்குமணம் போலத்தனி யாண்டுங்
கூடித் தங்குநலங் காணற்கரி தாம்சம்
புன்மைமறந்தோதும் பொய்ம்மைகொளுஞ்சூரன்

சிங்கத்துமு கன்சித்ரக்ர வுஞ்சத்தொடு தந்தித்தலை
யன்கொட்பறவென்றிட்டதொர்-கையிற்படைவேலன்
பரிவுள கணேசர் மகிழ்கந்தவேள்,

சேமப் பைம்பொனொடும் பாரக் குவடோங்கும்
கோலக் குன்றைநகுஞ் சேவற்கொடி வேந்தன்
தெண்ணிலவங்காலும் தண்மதியஞ்சாலும்

சங்கப்பணி லந்தத்தலை யுந்தத்தழை கண்டற்புதல்
அண்டித்தவழ் செந்திற்பதி-வள்ளற்குமரேசன்
சோதித் திங்களுடன் கூடிக்களி பாம்பும்
சூழச் செஞ்சடையின் கானிற்புனல் தாங்கும்
பண்ணவர் முன்பாரும் விண்முழுதுந்தாவும்

பைங்கட்கல பந்தொக்கவி ரிந்திட்டுவ லஞ்சுற்றிவ
ரும்பச்சைநி றம்பெற்றொளிர்-தெய்வச்சிகியூர்தி

தேவர்க் கைந்தருவும் பூணிற்செறி கூர்ங்கோம்
பாசைக் குஞ்சரமும் சீர்மற்றுள பாங்கும்
தம்பிறைகொண்டானெஞ் செம்மைபெறுங்காலம்
தங்கட்குற வெண்கைக்கரி தந்தாய்க்கவ ளர்ந்திட்டரு
ளும்பொற்பி. மங்கைக்கெழில்-வள்ளிக்குமணாளன்
கவிதமிழ் சபாபதி சொலும்பிரான்,

சேணிற் சங்ககமுங் காலைக்கதிர் காந்தும்
கோலச் செஞ்சுடர்வங் காலொத்தொளிர் சேந்தன்
பன்னிருதிண்டோளன் தென்னணிசெங்கோடன்
சங்கத்தமிழ் விஞ்சைக்கதி பன்சற்குரு வின்பப்பிர
சந்தற்றக டம்பிற்புனை-செவ்வித்திருமார்பன்
வாகைச் சந்தனசிந் தூரத்தொடு கோங்கும்
கோடற் குங்குமமும் பாளைக்குலை யீந்தும்
புன்னைவயங்காரம் சொன்னநறுந்தேனும்
சிந்திக்கன நந்திக்கிரி நின்றித்தரை சந்தித்தணு
வுந்தற்குறை வின்றிப்பெரு-வெள்ளத்தமிழ்பாவி
சீதத் தெண்டிரையின் பாணித்தில மீந்தும்
தேனுத் தந்திடனன் றுயித்திசை வாய்ந்தும்
பெண்ணையினூந்தாய்தென் றெண்ணநிதஞ்சூழும்

தங்கப்பதி யெந்தத்தவ ருஞ்சித்தர்க ளுஞ்சித்திபெ
றம்பட்சமு வந்துத்தம-வுய்வைத்தருபோரி
கருமுகிலு லாவுவரை யின்கணே.

பெண்கலே.

காமத் தின்கலகங் கூறிச்சமர் தூண்டுங்
கோவைப் பஞ்சசரம் போடத்தனி வாங்குங்
கன்னலடுஞ்சாபன் தன்னுருவந்தேறுந்
தந்தக்கய மென்றுட்குற எண்டிக்குநி றைந்தெப்புடை
யுந்தைத்துநெ ருங்கிச்சொல-எல்லேக்களவா மல்
மூடிக் கொண்டுகொடும் பாவப்பயி ரோம்புங்
கேதத் தென்றுமகங் காரித்தெழு தீங்கும்
டன்னெறியுள்சூதுங் சண்ணுபனைப்போலும்
பந்தித்தும யங்திப்புலி யுஞ்சொர்க்கமு நுங்கிக்கிளர்
கங்குற்பொழு தின்கொத்தலர்-அல்லிற்கனியாமம்
காணக் கண்டிருகும் பாடுற்றிமை கூம்பும்
தேவர்க் குஞ்சொலவுந் தாபெப்படி தோன்றும்
கன்பமிகுங்கோளன் சென்மபயந்தீரும்

சந்தர்ப்பமும் உண்டுய்த்திட என்றுட்கொள வுந்தக்கதி
வஞ்சத்திமி ரந்தப்புவ-தெவ்வர்க்குமொணாது
வனமருவி யாளியு மியங்குமால்,

காளிக் குந்திகிலுண் டாகச்சொலு காந்தம்
சாரப் பண்டுபெயுஞ் சோனைப்புயல் போந்தன்
றென்னவிரைந்தீரங் கொண்முமதம்பாயும்

கும்பத்தினை வெங்கட்பக டும்பற்றொகை பம்பிக்கொடு
சண்டப்பிர சண்டத்தெதிர்-மல்லிட்டமாடும்
சாடப் பிண்டுமனம் பேதித்தட லோய்ந்தும்
போருக் கஞ்சிவிழுந் தோலிட்டடி சாய்ந்தும்
பன்ம்ருகமுஞ்சோரும் பின்னமடைந்தாகம்

புண்பட்டுமு றிந்தெய்த்தக முன்சொக்கிநடுங்கப்பொரு
சிங்கத்திர ளின்கெர்ச்சனை-சொல்லத்தரமேது
காதத் தும்படருங் கோபப்புகை கான்றும்
சேதித் தும்பொழியுஞ் சோரித்தசை மாந்தும்
கன்னமிடுஞ்சோரன் தன்மையெனுங்கோரங்

கண்டெத்துணை வன்கட்பகை யுஞ்செற்றபெ
[ருங்கொற்றவ]

ருஞ்சித்தம தஞ்சத்திரி-சள்ளைப்புலிகோடி
வழிவருகி லேசமென கொஞ்சமோ,
நேமிச் செங்கையினன் தானப்புவி வாங்கும்
போதிற் சிந்துருவம் பாரித்தகி லாண்டங்
கண்மிசையும்போதந் தண்மிவளர்ந்தேயும்

புங்கப்படி வங்கட்புல முன்புக்கென நின்றட்டகி
கந்தத்துமொ ருங்கத்தொடர்-கல்வெற்புமநேகம்
சாரற் கண்பரவுஞ் சோலைக்கிளி போன்றஞ்
சாமற் றுன்றினர்நெஞ் சீடற்றிட வூன்றுங்
கன்னியர்சஞ்சாரம் பண்ணியிடுந்தாவந்

கொஞ்சத்தில டங்கத்தரம்அன்றெப்புற முந்துட்டம்ரு
கங்கட்கொர்பதுங்கற்கிட-மொல்லைத்தருகானம்
நேருற் றங்குடனிங் கோடித்திசை தாண்டுங்
கூர்மைத் தம்பெறியுஞ் சோரத் தொழி னோர்ந்திங்
கென்னெனவம்பாகுந் திண்மைசெயுந்தீரம்

கொண்டத்துறைவந்திட்டவர்தம்பட்டிமைவஞ்சத்துள
மூந்தக்கொலை மிஞ்சிப்புரி-கள்வர்க்குறவேது
இனிநல இராவருத லன்பனே.

நேரத்தொன் றுடனொன் றாடிச்சம மூண்டண்
டாமற் சென்றுபடிந் தாழப்புன னீந்தும்
கண்ணனலங்காலுந் துண்ணெனவஞ்சீறுங்
கன்றிப்புன லின்கட்படி செந்துக்களை அங்கத்துடல்
துண்டிக்குமி டங்கர்த்தலை-துள்ளத்திரைமோதும்
ஆறச் சங்கொளவுண் டேகத்தடை யாந்தன்
சார்பிற் பின்றுணையும் போதற்கிலை பாங்கன்
தன்னுடனுஞ்சேர்வின் றின்னணமிங்கேகுந்
தொந்தத்தைநினைந்திட்டிடி லெங்கட்குமனந்தத்துற
லன்றித்திட மெந்தப்படி-கொள்ளத்தகுமேலும்
நேசிக் தின்றளவுந் தேடித்துயர் கூர்ந்தன்
காவற் கொண்டுறையுஞ் சூழுற்றனை வேண்டும்
பெண்ணமுதுந்தானொந் தின்னலுறுங்காணின்
சங்கத்தெவை யுங்கற்றவர் தங்கற்பனை இந்தத்தணி
வென்சொற்றிட நங்கைக்குமி-துள்ளச்சகியாது
இறையுபட மாணினி பிரிந்திராள்.

பட்டினத்துப் பிள்ளையார்

உடற்கூற்று வண்ணம்.

தன தன தான தனதனதான
தந்ததனந்தன தந்ததனந்தன
தனனதனந்த தனனதனந்த
தானனதானன தானனதந்த
தந்ததனதான தனதானனு.

ஒருமடமாது மொருவனுமாகி
யின்பசுகந்தரு மன்புபொருந்தி
யுணர்வுகலங்கி யொழுகியவிந்து
வூறுசிரோணித மீதுகலந்து
பனியிலொர்பாதி சிறிதுளிமாது
பண்டியில்வந்துபு குந்துதிரண்டு
பதுமவரும்பு கமடமிதென்று
பார்வைமெய்வாய்செவி கால்கைகளென்ற
உருவமுமாகி யுயிர்வளமாத
மொன்பதுமொன்றுநி றைந்துமடந்தை

யுதாமகன் று புவியில்விழுந்து
யோகமும்வாரமு நாளுமறிந்து
மகளிர்கள்சேனை தரவணையாடை
மண்படவுந்தியு தைந்துகவிழ்ந்து
மடமயில்கொங்கை யமுதமருந்தி
யோரறிவீரறி வாகிவளர்ந்து
ஒளிநகைவூற லிதழ்மடவாரு
வந்துமுகந்திடவந்து தவழ்ந்து
மடியிலிருந்து மழலைமொழிந்து
வாவிருபோவென நாமம்விளம்ப
உடைமணியாடை யரைவடமாட
வுண்பவர்தின்பவர் தங்களொடுண்டு
தெருவிலிருந்து புழுதியளைந்து
தேடியபாலரொ டோடிநடந்து
அஞ்சுவயதாகி விளையாடியே,

உயர்தருஞான குருவுபதேச
முந்தமிழின் கலை யுங்கரைகண்டு

வளர்பிறையென்று பலரும்விளம்ப
வாழ்பதினாறுபி ராயமும்வந்து
மயிர்முடிகோதி யறுபதநீல
வண்டியிர் தண்டொடை கொண்டைபுனைந்து

மணிபொனிலங்கு பணிகளணிந்து
மாகதர்போகதர் கூடிவணங்க
மதனசொரூப னிவனெனமோக
மங்கையர்கண்டும ருண்டுதிரண்டு

வரிவிழிகொண்டு சுழியவெறிந்து
மாமயில்போலவர் போவதுகண்டு
மனதுபொரும லவர்பிறகோடி
மங்கலசெங்கல சந்திகழ்கொங்கை

மருவமயங்கி யிதழமுதுண்டு
தேடியமாமுதல் சேரவழங்கி
ஒருமுதலாகி முதுபொருளாயி
ருந்ததனங்களும் வம்பிலிழந்து

மதனசுகந்த விதனமிதென்று
வாலிபகோலமும் வேறுபிரிந்து

வளமையுமாறி யிளமையுமாறி
வன்பல்விழுந் திருகண்களிருண்டு
வயதுமுதிர்ந்து நரைதிரைவந்து
வாதவிரோதகு ரோதமடைந்து
செங்கையினிலோர் தடியுமாகியே,

வருவதுபோவ தொருமுதுகூனு
மந்தியெனும்படி குந்திநடந்து
மதியுமழிந்து செவிதிமிர்வந்து
வாயறியாமல்வி டாமன்மொழிந்து
துயில்வருநேர மிருமல்பொருது
தொண்டையுநெஞ்சு முலர்ந்துவறண்டு
துகிலுமிழந்து சுணையுமழிந்து
தோகையர்பாலர்கள் கோரணிகொண்டு
கலியுகமீதி லிவர்மரியாதை
கண்டிடுமென்பவர் சஞ்சலமிஞ்ச
கலகலவென்று மலசலம்வந்து
கால்வழிமேல்வழி சாரநடந்து

தெளிவுமிராம லுரைதடுமாறி
சிந்தையுநெஞ்சமு லைந்துமருண்டு
திடமுமலைந்து மிகவுமலைந்து
தேறிநலாதர வேதெனநொந்து
மறையவன்வேத னெழுதியவாறு
வந்ததுகண்டமு மென்றுதெளிந்து
இனியெனகண்ட மினியெனதொந்த
மேதினிவாழ்வுநி லாதினிநின்ற
கடன்முறைபேசு மெனவுரைநாவு
றங்கிவிழுந்துகை கொண்டுமொழிந்து
கடைவழிகஞ்சி யொழுகிடவந்து
பூதமுநாலுசு வாசமுநின்று
நெஞ்சுதடுமாறி வருநேரமே,

வளர்பிறைபோல வெயிறுமுரோம
முஞ்சடையுஞ்சிறு குஞ்சியும்விஞ்ச
மனதுமிரண்ட வடிவுமிலங்க
மாமலைபோல்யம தூதர்கள்வந்து
வலைகொடுவீசி யுயிர்கொடுபோக
மைந்தரும்வந்து குனிந்தழநொந்து

மடியில்விழுந்து மனைவிபுலம்ப
மாழ்கினரேயிவர் காலமறிந்து
பழைபவர்காணு மெனுமயலார்கள்
பஞ்சுபறந்திட நின்றவர்பந்த
ரிடுமெனவந்து பறையிடமுந்த
வேபிணம்வேகவி சாரியுமென்று
பலரையுமேவி முதியவர்தாமி
ருந்தசவங்கழு வுஞ்சிலரென்று
பணிதுகிலொன்கல் களபமணிந்து
பாவகமேசெய்து நாறுமுடம்பை
வரிசைகெடாம லெடுமெனவோடி
வந்திளமைந்தர்கு னிந்துசுமந்து
கடுகிநடந்து சுடலையடைந்து
மானிடவாழ்வென வாழ்வெனநொந்து
விறகிடைமூடி யழல்கொடுபோட
வெந்துவிழுந்துமு றிந்துநிணங்க
ளுருகியெலும்பு கருகியடங்கி
யோர்பிடிநீறுமி லாதவுடம்பை
நம்புமடியேனை யினியாளுமே.

தாயுமான சுவாமிகள்
வண்ணம்.

அருவென் பனவுமன்றி உருவென் பனவுமன்றி
அகமும் புறமுமன்றி முறைபிற ழாது
குறியுங் குணமுமன்றி நிறைவுங் குறைவுமன்றி
மறையொன் றெனவிளம்ப விமலம தாகி
அசலம் பெறவுயர்ந்து விபுலம் பெறவளர்ந்து
சபலஞ் சபலமென்றுள றிவினர்காண
ஞானவெளியிடை மேவுமுயிராய்,

அனலொன் றிடவெரிந்து புகைமண் டிடுவதன்று
புனலொன் றிடவமிழ்ந்து மடிவில தானை
சருவும் பொழுதுயர்ந்து சலனம் படுவவன்று
சமர்கொண் டழிவதன்றே ரியல்பின தாகும்
அவனென் பதுவுமன்றி அவளென் பதுவுமன்றி
அதுவென் பதுவுமன்றி யெழில்கொ டுலாவும்
ஆருயிலையறி யாதபடியே,

இருளென் பதுவுமன்றி யொளியென் பதுவுமன்றி
எவையுந் தனுளடங்க வொருமுத லாகும்
உளதென் பதுவுமன்றி யிலதென் பதுவுமன்றி
உலகந் தொழவிருந்த வயன்முத லோர்கள்
எவருங் கவலைகொண்டு சமயங்களில் விழுந்து
சுழலும் பொழுதிரங்கி யருள்செயு மாறு
கூறரியசக மாயையறவே,

எனதென் பதையிகழ்ந்த வறிவின் றிரளினின்று
மறிவொன் றெனவிலங்கு முபயம தாக
அறியுந் தரமுமன்று பிரியுந் தரமுமன்று
அசரஞ் சரமிரண்டி னொருபடி யாகி
எதுசந் ததநிறைந்த தெதுசிந் தனையிறந்த
தெதுமங் களசுபங்கொள் சுகவடி வாகும்
யாதுபரமதை நாடியறிநீ,

பருவங் குலவுகின்ற மடமங் கையர்தொடங்கு
கபடந் தனில்விழுந்து கெடுநினை வாகி
வலையின் புடைமறிந்த மறியென் றவசமுண்டு
வசனந் திரமுமின்றி யவரித ழூறல்
பருகுந் தொழிலிணங்கி யிரவும் பகலுமின்சொல்

பகரும் படிதுணிந்து குழலழ காக
மாலைவகைபல சூடியுடனே,

பதுமந் தனையிசைந்த முலையென் றதையுகந்து
வரிவண் டெனவுழன்று கலிலென வாடுஞ்
சிறுகிண் கிணிசிலம்பு புனைதண் டைகண்முழங்கும்
ஒலிநன் றெனமகிழ்ந்து செவிகொள நாசி
பசுமஞ் சளின்வியந்த மணமுந் திடமுகந்து
பவமிஞ் சிடவிறைஞ்சி வரிசையி னூடு
காலின்மிசைமுடி சூடிமயலாய்,

மருளுந் தெருளும்வந்து கதியென் பதைமறந்து
மதனன் சலதிபொங்க விரணம தான
அளிபுண் டனைவளைந்து விரல்கொண் டுறவளைந்து
சுரதஞ் சுகமிதென்று பரவச மாகி
மருவுந் தொழின்மிகுந்து தினமுந் தினமும்விஞ்சி
வளரும் பிறைகுறைந்த படிமதி சோர
வானரமதென மேனிதிரையாய்,

வயதும் படவெழுந்து பிணியுந் திமிதிமென்று
வாவுஞ் செயலழிந்து ளிருமலு மாகி

அனமுஞ் செலுதலின்றி விழியுஞ் சுடர்களின்று
முகமுங் களைகளின்று சரியென நாடி
மனையின் புறவிருந்த வினமுங் குலைகுலைந்து
கலகஞ் செயவிருண்ட யமன்வரும் வேளை
ஏதுதுணைபழி காரமனமே.

தாயுமான சுவாமிகள் வண்ணம்.

முற்றிற்று.

அந்தகக்கவி வீரராகவ முதலியார்

பரராசசேகரன்மீது பாடிய வண்ணம்.

குழிப்பு.

தனதத்தன தனா தனதன தனனதனன தனா தன
தனதத்தனதன தனனதனனதன தனனதனனதன [தனதனதானா
தனா தனந்தனா தனா. (தொங்கல்)

*பதுமத்தடி யிணையாள் பிடிநடை பயிலுமியலு [நடையா ளதி
படிவக்கடிதட மிடறுகடிதுப — படலவடலுரக [படமுடிபோல்வாள்
கலைபொற்கலை யுடையாள் பயிரவி கரடமிருக [விடையா ளிரு
கடினத்தொடுகுட மகுடவதுடமிடு கபடவடகமிடு [கனதனமார்பாள்
பசலைக்கிளி யுகிராள் வளர்கிளி பழகுமழகி [யகையா ளித

*இதின் மற்றைப்பாதி கிடைத்திலது.

பாதத்திருமத வாததிருமதுர பரமர்திகிரிநிறை
[பரவிருதோளாள்
களமே விளங்குகோ டனையாள்.
பனிமுக்கனி மொழியா ளுடுபதி பரவுமொளிய
[நகையாள் சிறு
பவளத்துளவள்மெவளவவளவுள பளிதவொளிதபரி
[மளமுளவாயாள்
பருமுத்துறுகுமிழாள் சததள பதுமவதன
[மதனுள் பணி
யணிபற்றிரணிய புரணகிரணகுண வருணவருணவினை
[யவரிணைகாதாள்
பருவப்பிறைநுதலா ணறையறி பறவையனைய
[குழலாண் முகில்
படியக்கடிதடு கடுவைவடுவைவிடு படையை
[முடுகுகணை
படரிருகோவாள்.
உனைவீ தியின்கணே தொழுதாள்.
புதுமைப்பிறை யனையா ளெழுபரி புணரிபுணர
[வுணராள் வெயில்
புதையக்கதிரெதி ருதயமதியமன புதியமதியையும்
[விதியையுநோவாள்

விமிதத்துவ ரதியா ணறுநுதன் ம்ருகமத
[திலகமிடாள் பொரு
விரகப்புரவியைவெருவியுருவிலியைவெருவியருவியிரு
[விழிதாவேவாள்
புலரிக்கலை தெரியாள் புழுகிரு பொழுதுமுழுதுமெழு
[தாள் பல
புளினத்தளிநளி நளினநளினவிள புளககலபவித
[முறுபுனலாடாள்
அயிலாள் கருங்கணே துயிலாள்,
புனிதப்பணி யணியாள் மினிர்தளிர் பொருவலளக
[முடியா டிசை
புரளக்கரளம தருளுமருளுந்தி பொதுவரதிமதுர
[பொறுபொடாறுமாறுள்
அயலுக்கய லுநிலாள் தனையை யமுனுமெனவு
[நினையாள் மன
மயர்வுற்றயிலுவ ளெழுவடொழுதழுவள் விழுவண்
[மொழிவளுயிர்
அயுருவள் சோர்வாள்

பொழிமட்டணை தனிலே யினியிவள் புலருமயல
[கலவே மத
புலமைச்சிலைமுலை குலையநிலையமலை புலவிகலவிநிலை
[முரிதரவேநீ
மருவா ததென்கொலோ புகல்வாய்.

தண்டபாணி சுவாமிகள் வண்ணம்.

தனனா தனனா தனனத் தனன தத்த
தனனா தனனா தனனத் தனன தத்த
தனனத் தனனதத்த தனனத் தனனதத்த
தனனத் தனனதத்த தனனத் தனனதத்த
தொங்கல். தனன தனாதனத்த தத்ததய்யனா.

குருதே சிகனார் சிவசுப் பிரம ணிக்கு
விலைநா மெனவே தமிழிற் கவிதொ டுக்கு
மருமைப் புலவர்சித்த மலரிற் றினநடிக்கு
மிருபொற் கடல்படைத்த • பெருமைக் குமாரர்
கருணா கரவேள் பொதியக் கிரியி லுற்ற
குருமா முனிபா லருண்மெய்ப் பொருளை யொப்பி
லொருகைக் கிளியினுக்கு முதவிப் புகழ்பொறுத்த
கருணைக் கடல்படைக்கை - பெறுசுத் தவீரர்
குலசே கரனார் சருணக் கடவு ளர்க்கு
ளுயர்சீ ருடையார் தனிநிட் களவி ருப்ப
பருளிற் றருமொருத்தர் முதன்மைக் கடவுள்செட்டி

மனையிற் குளுமுநித்த - புனிதக் குணலர்
அயிலதனு லமர்க்க ளத்தைவெலுவார்.

கொலைவே ரறவே கருதித் தவமி யற்று
மவர்பா லணிமா மயிலிற் றிகழ்சி றுக்கர்
புலமைத் திறன்மிகுக்கு மொருபத் தன்வசமற்று
வெருளச் செயலலைக்கோ - ரமனைத்த பாலர்
அருணை புரியா லயவட் டமதி ளுக்குண்
மனையா டனையோர் தவசிக் குதவு பத்த
னதுகைப் பொருண்முடித்த சிகரிக் குவடபக்க
மொருசொற் பகருநித்த-ருலகச் சகாயர்
குளிர்தா மரையா கியதொட் டிலத னுக்கு
ளொருசே யெனவா வியிலுற் றமுரு கப்பர்
தருணத் திலெனதிச்சை வழிநிற் குமுயர்சித்தர்
பொருகுக் குடமுழக்க-மலிவுற் றதோளர்
அடிய வர்வாய்மைமையைக்க ருத்திலுள்ளுவார்.

திருநீ றணியா தவரைக் கருவி மிக்க
மதுரா புரியூர் வழுதிக் கருள்கொ டுத்த
கலைபுற் றவனைமெச்சு மவருக் கினியர்சட்டி
விரதத் தினர்க ருத்து-முடியச் செய்தேவர்

துணிவே வடிவா கியசத்தியம துற்ற
கவுமா ரரையோர் கொதுகிற் கருது நர்க்கு
நிலைகெட் டறிவுகெட்டு வழிகெட் டழகுகெட்டு
வழிகெட் டலையுநட்ட-முறவிட்டவேடர்

திரையா ழியில்வா ழவுணக் கருவி றுத்த
பெருமா ணெடுமால் விழிபெற் றமக ளிர்க்கொ
ருரிமைக் கணவர்பறபல் கனவிற் பல்வடிவத்தொ
டொளிர்சத்.திபெறுமிட்டர்-மலையுச் சியாளர்
செயிர றுசிர்தொடுத்து மெத்தகல்குவார்

சினைமா முகில்சேர் பொழிலிற் றினைவி ளைக்குண்
மயில்போல் வருவார் மயன்முற் றியவர் செப்பு
மொழியிற் பரிதவித்து விழியிற் சுழல்வதுற்று
வலியத் தொழுதிரக்கும்-விடர்சுற் றுசாரல்

வளமே லிடலா விமயக் கிரியும் வெட்க
வடமே ருவைநேர் செரலநிற் குமெழில் பெற்று
முனிவர்க் குமமரர்க்கு முரகர்க் குமனிதர்க்கு
மிவரொக் குமெவ ருக்கு-முயிரொத் துநீடு
செயலோ டொருமா நதிமத் தியிலெ னக்கு
மொருநா ளொருபே ரறிவுற் றிடவு ணர்த்தி

மணமெப் படியமெப்பை யிசையெப் படியிசைப்பை
நுதலொத் தெழுநிலைக்கி-லதுவெட் டுமோசொல்
விழிவேல் வரைவா யவைகட் குளசி மிட்டு
நயமா தியசீ ருறவைப் பதிலை மெய்ச்சொல்
குழையிட் டசெவிசற்றுமசைவற் றெழுநிலைப்பை
யலர்துத் திமலரொத்த-பணியிட் டநாசி

பொறியால் வரைவாய் மணமெப் படிமு கக்கு
மிதழ்வாய் வரைவாய் நகையெப் படிந கைக்கு
முரையெப் படியுரைக்கு மமுதெப் படியளிக்கு
வரைவுற் றகவுண்முத்த-மிடவொப்புவாகொல்
படமொடுதுரிய மிச் சைகொள்வதேன்

விருகா சுரனு லவனைப் பொடியவிட்ட
நெடியோன் வளைநேர் களமப் படிய மைக்கி
லுயர்புட் குரல்களெட்டு ளொருசத் தமும்விளைப்ப
திலைபொற் கிரிகளொத்த-முலைமுற்றுநாடி
யறியா யெவணீ யெழுதத் தகும ணத்த
தொயிலார் சிறுதோ ளதுதொட் டுவிறன் மட்டு

மலயக் கிரியினுக்கு மகள்பெற் றமகவொத்து
முதிர்சொற் பனுவல்கட்கு-மிகவிச் சையான
திருவு ருமாமலைக்க டுத்தநெல்லையாய்

புருகூ தனைமா யவனைக் குகனை வெற்றி
மலர்மா றனைநேர் வடிவுற் றவனை யப்பெண்
மனதிற் றினநினைப்பள் வெளியிற் கபடம்வைத்து
மபலற் றவர்களொக்கு-மொழிசெப் புவாள்மெய்

அதைநீ யறியா துலகிற் பலரு மெச்சு
மடலே றிடநா டினையப் படிவ ருத்த
முயல்வுற் றுமுனைவற்ற பனைமட் டைகளறுக்கும்
வருவத் தனையுளொற்றை-விதிதப்பினீதி
புரிவோன்வடிவாள் கொடுவெட் டுமுடன் மூற்று
மதநீர் வருமோ விதனிற் றுணிவு பெற்று
மவள்பொற் பெழுதநத்தி யெனையொப்
[பெனவிசைத்த
துனையொத் தவர்கள்பற்று-மியல்பிற் கொவாது
பயிலருநூன்மிகப்ப டித்தசெல்வனே.

புதுமா மலர்சூ டியயமைக் குழல்வ னப்பு
வரைவா யரனுர் கவியிற் புகழு மொப்பின்

நினைவிற் றிகழுமட்டி லெழுநிக் கொளினுமிச்சை
முடியத் தழுவிநித்த-மகிழச் செபாது
விடகா கமும்வா ழைபுமொக் குமவை முற்சொல்
சிலநீ யொருவா றறிதற் குமிட மற்று
மறைவுற் றிடவுடுத்த கலைசுற் றிடுமவற்றை
மனதிற் கருகல்பற்றி-யெழுதற் கொணாது
மயிலனை யாடனைத்து நித்துவெளவினால்.

மிளிர்தா டனைமே லுறவைத் திடல்கி டைக்கு
மிகழ்வா ரடல்வே ளெனமெச் சுபகழ் கிட்டு
மதனப் பயல்விடுத்த கணைபட் டுவடுவுற்ற
மெலிவற் றிடுமெளப்பில்-சுகசித்தமாகும்

இதுதான் முறையா மிதைவிட் டுனுயி ரற்ப
மெனநா டுதல்வீ ணதைவிட் டுவிடு முற்சொல்
விதியிற் செயினுமக்க ளினரிற் சிலரவட்கு
ளிவனைப் புணருநட்ப-திலைவித்தையாடி
வெளிறு கியநீர் தெருவிற் சிதறி விட்டு
நெறியோர் பவனு மரசர்க் குமய லிட்டு
மலரிற் றிருவையொத்த மகளைக் கொடுநடக்கை
கொடிநிற் கொடிதெனச்சொ லுவர்செப்புமாறு
மறுவி டுவாய்களிப்ப னைத்து மெய்துமே.